**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்**

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22- ம் நாள் திரு.S.இராமச்சந்திரன், B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதிசெய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| O.S.No. | : 411/2023 | வா.சா. | : 1 |
| பெயர் | : திரு. கோகுலகிருஷ்ணன் | | |
| த/பெ. | : திரு. தங்கமுத்து | | |
| கிராமம் | : | சாதி | : |
| தாலுக்கா | : | சமயம் | : |
| வயது | : 32 | தொழில் | : |

**முதல் விசாரணை :**

நான் வாதி வங்கியில் உதவி மேலாளராக பணியாற்றி வருகிறேன். முதல் விசாரணைக்கான எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாகத் தாக்கல் செய்கிறேன். மேற்படி பிரமாண வாக்குமூலத்தை எனது முதல்விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். 09-03-2021 தேதியிட்ட கடன் விண்ணப்பம் வா.சா.ஆ.1 ஆகவும், 10.03.2021 தேதியிட்ட கடன் அனுமதி உத்தரவு வா.சா.ஆ.2 ஆகவும், 10.03.2021 தேதியிட்ட கடன் ஒப்பந்த பத்திரம் வா.சா.ஆ.3 ஆகவும், 10.03.2021 தேதியிட்ட கடன் ஒப்புதல் கடிதம் வா.சா.ஆ.4 ஆகவும், 13.10.2022 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ.5 ஆகவும், அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை வா.சா.ஆ.6 ஆகவும், கணக்கு விபர பட்டியல் வா.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யவேண்டுகிறேன். தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.